S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 338 | 31.05.2026 | SUNDAY | VAIKASI : 17 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 338 | 31.05.2026 | ஞாயிற்றுக்கிழமை | வைகாசி : 17 | விலை : ரூ.5/–

## 717ல் எத்தனை டாஸ்மாக் கடைகள் மூடல்?

# "வெள்ளை அறிக்கை கோரும் பாஜக"

சென்னை: மே.31-

'ஆட்சிக்கு வந்தவுடன் 717 டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிட்டதாக பெருமை பீற்றிக் கொண்ட தவெக அரசு, அவற்றில் எத்தனை கடைகள் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன என்பது குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும்' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'மதுரை திருப்பரங்குன்றம் பகுதியில் அரசு உத்தரவின் பேரில் மூடப்பட்ட 3 டாஸ்மாக் கடைகளில் ஒன்று மீண்டும் திறக்கப்பட்டிருப்பதாகவும், குறிப்பிட்ட டாஸ்மாக் கடையின் பார் உரிமையாளர் தவெகவைச் சேர்ந்தவர் என்பதால் இச்சலுகை கிடைத்திருக்கலாம் எனவும் வெளியாகியுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

"இவங்களே பாம் வைப்பாங்களாம், இவங்களே எடுப்பாங்களாம்" என்பதைப் போல நடக்கும் இந்த தில்லுமுல்லு நாடகங்கள் முதல்வர் ஜோசப் விஜய் அவர்களுக்கு தெரியாமலா நடக்கும்?

தவெக நிர்வாகிகளுக்கு கொலை செய்யவும், பாலியல் குற்றங்களில் ஈடுபடவும், மிரட்டி மாமூல் வாங்கவும், சட்டவிரோதமாக டாஸ்மாக் நடத்தவும் முழு சுதந்திரம் கொடுப்பதுதான் அனைவருக்குமான ஆட்சியா?

ஆட்சிக்கு வந்தவுடன் 717 டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிட்டதாக பெருமை பீற்றிக் கொண்ட தவெக அரசு, அவற்றில் எத்தனை கடைகள் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன என்பது குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும்.

முந்தைய அரசைப் போலவே வெற்று விளம்பரங்களில் ஆட்சி நடத்துவதை விட, ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் முதல்வர் விஜய் கவனம் செலுத்த வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

## "அதிமுகவில் பிரிவை ஏற்படுத்த நான் ஒருபோதும் எண்ணியதில்லை" லீமா ரோஸ் விளக்கம்

சென்னை: மே.31-

"அதிமுகவில் பிரிவுகள் ஏற்படுத்த நான் ஒருபோதும் எண்ணியதில்லை. என் மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சில வாடகை பேச்சாளர்களால் பரப்பப்பட்ட வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது தலைவர்களின் இணைப்பு" என அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸ் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'அதிமுகவின் முன்னணி தலைவர்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் களைந்து கட்சி ஒன்றுபட்டது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. சமீப காலமாக என்னை வைத்து சில வாடகை பேச்சாளர்கள் எந்த வித அடிப்படை ஆதாரமும் இன்றி சொல்லிய கட்டுக்கதைகள் பொய்த்துப் போயின.

எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்டு, ஜெயலலிதாவால் செழுமைப்படுத்தப்பட்ட பேரியக்கத்தில் பிரிவுகள் ஏற்படுத்த நான் ஒருபோதும் எண்ணியதில்லை. என் மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சில வாடகை பேச்சாளர்களால் பரப்பப்பட்ட வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது இந்த இணைப்பு.

பல கோடி மக்களின் நம்பிக்கையாக திகழும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு லால்குடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது என் வாழ்நாளின் பெரும் அங்கீகாரமாக கருதுகிறேன்.

எனது தொகுதி மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கிடவும், தொகுதி வளர்ச்சிக்கு உழைப்பதுமே என்னுடைய முதன்மை கடமையாக எண்ணுகிறேன். தமிழ்நாட்டில் மீண்டும் ஜெயலலிதாவின் நல்லாட்சி மலர்ந்திட எடப்பாடி பழனிசாமி தலைமையில் அயராது பாடுபடுவோம்' எனத் தெரிவித்துள்ளார்.



## செப்புப்பட்டயம் இருக்கு... ஆனா 300 ஆண்டுகால உரிமை இல்லை!

## கண்ணீருடன் நீதி கேட்கும் சிவகங்கை மேனாட்டான் வகையறா குடும்பங்கள்! அமைச்சர், கலெக்டர் முதல் CM வரை பறந்த அவசர புகார்!

சிவகங்கை, மே.31-

சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையில் உள்ள பிரசித்தி பெற்ற கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோவில் வைகாசி விசாகத் தேர்த்திருவிழா, சேங்கை விட்டு திருவிழா மற்றும் புரவி எடுப்பு திருவிழாக்களில் தங்களின் 300 ஆண்டுகால பாரம்பரிய உரிமைகள் மறுக்கப்படுவதாக மேனாட்டான் வகையறாவைச் சேர்ந்த அழகர்சாமி, நாராயணன், முத்துக்குமார் உள்ளிட்ட வாரிசுதாரர்கள் கண்ணீருடன் குற்றம்சாட்டியுள்ளனர்.தங்களின் முன்னோர்களுக்குப் பழங்காலத்தில் வழங்கப்பட்ட செப்புப்பட்டயங்கள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின்படி, மேளம் கொட்டுதல், காலாஞ்சி வாங்குதல், தேருக்கு தைலக் கொட்டீஸ் கொண்டு செல்லுதல், கிடாய் வெட்டுதல் மற்றும் கயிறு திரித்தல் உள்ளிட்ட கோவில் சார்ந்த பாரம்பரியப் பணிகளைத் தாங்களே செய்து வந்ததாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தங்களைத் திருவிழாக்களில் பங்கேற்க விடாமல், சமூக ரீதியாக ஒதுக்கி வைத்துத் திருவிழா நடத்தப்படுவதாகவும், "ஊர் முன் விழுந்து கும்பிட்டால்தான் சேர்த்துக் கொள்ளப்படும்" என நெருக்குடி தருவதாகவும் வாரிசுதாரர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். தங்களுக்கு நியாயமான உரிமைகளும், பாதுகாப்பும் வழங்கக் கோரி தமிழக முதல்வர், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்குப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கடந்த 25.05.2026 அன்று அதிரடியாக மனு அளித்துக் காத்துக்கிடக்கின்றனர். மனிதர்களைச் சாதி, மத, வர்க்க பேதமின்றி ஒன்றிணைக்க வேண்டிய ஆன்மீகத் திருவிழாக்களில், இன்னும் 300 ஆண்டுகாலப் பாரம்பரிய உரிமைகளைப் பறித்து, சமூக ஒடுக்குமுறையையும் புறக்கணிப்பையும் கையில் எடுப்பது அநாகரிகத்தின் உச்சம்! "ஊர் முன் விழுந்து கும்பிட்டால்தான் திருவிழா" என்ற ஆதிக்க மனப்பான்மை நவீனச் சமூகத்திற்கு உகந்தது அல்ல. சட்ட விதிகளும், நீதிமன்ற உத்தரவுகளும் சாமானியர்களுக்கும் சமமானவை என்பதை உணர்த்தி, சிவகங்கை மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டுப் பாதிக்கப்பட்ட எளிய குடும்பங்களின் உரிமையையும், சமூகப் பாதுகாப்பையும் போர்க்கால அடிப்படையில் உறுதி செய்ய வேண்டும் என்பதே ஜனநாயகத்தின் உண்மையான ஆட்சியும் காட்சியும் கூட.

## "கடந்த காலங்களில் நடந்தது குதிரை பேரமா, கழுதை பேரமா?" : துரை வைகோ

புதுக்கோட்டை: மே.31-

"தவெக அரசு அமைந்திருப்பதில் குதிரை பேரம் நடந்துள்ளதாக பேசும் கட்சியினர், கடந்த காலங்களில் நடந்தது குதிரை பேரமா, கழுதை பேரமா என்பதை கூற வேண்டும்" என மதிமுக முதன்மைச் செயலாளரும், எம்.பி.யுமான துரை வைகோ தெரிவித்தார்.



புதுக்கோட்டையில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "சாதி, மதம், பணம் கடந்து தவெக ஆட்சி அமைந்துள்ளது. இதை வரவேற்கிறேன். இதன்மூலம் எளியவர்கள் உட்பட எவரும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மாற்றம் வேண்டும் என மக்கள் வாக்களித்துள்ளதால் சரியான அலுவலர்களை நியமித்து மாற்றத்துக்கான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்.

அதேவேளையில், புதிய அரசுக்கு அவகாசம் அளிக்க வேண்டும். குறிப்பாக, காங்கிரஸிடம் இருந்து தமிழகத்தில் ஆட்சியை திமுக கைப்பற்றியபோது ஏற்பட்ட நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. தவெகவை திராவிட இயக்கமாகவே பார்க்கிறேன். தவெக அரசுக்கு மற்ற கட்சிகள் ஆதரவு அளித்ததும், கூட்டணி அரசு அமைந்திருப்பதும் வரவேற்கத்தக்கது.

மதிமுகவின் அடுத்த கட்ட அரசியல் நிலைப்பாடு குறித்து கட்சியின் பொதுக்குழு கூடி முடிவெடுக்கும். தவெக அரசு அமைந்திருப்பதில் குதிரை பேரம் நடந்துள்ளதாக பேசும் கட்சியினர், கடந்த காலங்களில் நடந்தது குதிரை பேரமா, கழுதை பேரமா என்பதை கூற வேண்டும்" என்று தெரிவித்தார்.

## பட்டு வளர்ப்புத் துறையில் புதிய பதவிகளுக்கான சிறப்பு கல்வித்தகுதிகள்: அரசாணை வெளியீடு

**சென்னை, மே.31–**

தமிழக அரசின் கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் காதித் துறையின் செயலர் வி.அமுதவல்லி வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது: பட்டுவளர்ப்புத் துறை பணியிடங்களுக்கு சிறப்பு விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதன்படி, பட்டுவளர்ப்பு உதவி இயக்குநர் நேரடி நியமனத்துக்கு எம்எஸ்சி விவசாயம் (பட்டு வளர்ப்பு) பட்டம் கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்படுகிறது. அதேபோல், பட்டு வளர்ப்பு உதவி ஆய்வாளர் பதவிக்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி பிஎஸ்சி பட்டு வளர்ப்பு பட்டம் ஆகும்.

பட்டு வளர்ப்பு இளநிலை ஆய்வாளர் பதவிக்கு தோட்டக்கலை அல்லது விவசாயத்தில் டிப்ளமோ பெற்றிருக்க வேண்டும். அல்லது உயிரியல் அல்லது தாவரவியல், விலங்கியல் பாடங்களுடன் பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது. பட்டுவளர்ப்புத் துறையில் உதவி இயக்குநர், உதவி ஆய்வாளர், இளநிலை ஆய்வாளர் ஆகிய பதவிகள் புதிதாக உருவாக்கப்பட்டிருப்பதால் அவற்றுக்கான நேரடி நியமனங்கள் டிஎன்பிஎஸ்சி வாயிலாக விரைவில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## "கோட்டூர்புரத்தில் போராடியவர்களை கைது செய்தது தவெக அரசின் சர்வாதிகாரப் போக்கு" : தினகரன்

சென்னை: மே.31-

'கோட்டூர்புரத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகளை ஒப்படைக்கக் கோரி போராடிய பயனாளிகளை காவல் துறையை ஏவி கைது செய்திருக்கும் தவெக அரசின் அடக்குமுறை கடும் கண்டனத்துக்குரியது' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சென்னை கோட்டூர்புரத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடுகளை ஒப்படைக்கக் கோரி போராடிய பயனாளிகள் மீது காவல் துறையை ஏவி கைது செய்திருக்கும் தவெக அரசின் அடக்குமுறை கடும் கண்டனத்துக்குரியது.

தங்களின் உரிமைகளுக்காக போராடும் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய துறை சார்ந்த அமைச்சரும், சட்டப்பேரவை உறுப்பினரும் வராமல் காவல் துறையை பயன்படுத்தி, அவர்களை ஒடுக்க நினைப்பது சர்வாதிகாரப் போக்கே தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

எனவே, பயனாளிகளுக்கான வீடுகள் விரைந்து ஒதுக்கீடு செய்யப்படுவதை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமும், தவெக அரசும் உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.




# “டாப்பர்களுக்குக் கிடைத்த மாஸ் கௌரவம்!” தட்டி வாழ்த்திய தெற்கூர் நாயுடு உறவின்முறை சங்கம்

அலங்காநல்லூர், மே.31-
மதுரை மாவட்டம் பாலமேட்டில் உள்ள நாயுடு திருமண மண்டபத்தில், தெற்கூர் நாயுடு உறவின்முறை சங்கம் சார்பில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று மாஸ் காட்டிய மாணவமாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.சங்கத்தின் தலைவர் முருகானந்தம், செயலாளர் ராஜேந்திரன், பொருளாளர் சேகர் ஆகியோர் தலைமையில், இளைஞர் சங்கத் தலைவர் சந்திரன், செயலாளர் லோகநாராயணன், பொருளாளர் விஜய் ஆகியோர் முன்னிலையில் இவ்விழா ஒருங்கிணைக்கப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்ற திமுக வடக்கு மாவட்ட அவைத் தலைவர் பாலசுப்பிரமணியன் மற்றும் எம்.ஆர்.எம். முரளிதரன் ஆகியோர் சாதனை மாணவர்களுக்குக் கைத்தறிஆடை அணிவித்துக் கேடயம், மெடல் மற்றும் பரிசுகளை வழங்கித் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.இவ்விழாவில் மாணவர்களின் பெற்றோர்கள், சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் திரளாகக் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக வீரப்பன் நன்றி உரையாற்றினார்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (30.05.2026) தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 இல் தென்காசி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிட்ட 95 சட்டமன்ற தொகுதிகளின்,வேட்பாளர்கள் /வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் தேர்தல் செலவின கணக்குகளை சமர்ப்பித்து சரி பார்ப்பதற்கான ஆய்வு கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர்.இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்றது. உடன் தேர்தல் செலவின பார்வையாளர்கள் அபய் காந்த் தாஸ்.I.R.S ராஜ் குமார் சிங்..I.R.S அசோக் கௌதம்.I.R.S ஆகியோர் உள்ளனர்.

# அஜித் தாயார் மறைவு: முதல்வர் விஜய், அரசியல் தலைவர்கள் இரங்கல்



சென்னை: மே.31-
நடிகர் அஜித் குமாரின் தாயார் மோகினி மணி (வயது 85) உடல்நலக்குறைவு மற்றும் வயது மூப்பு காரணமாக சென்னையில் இன்று 30.05.2026 காலை உயிரிழந்தார்.

இந்நிலையில், நடிகர் அஜித் குமாரின் தாயார் காலமானதைத் தொடர்ந்து, முதல்வர் விஜய், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

முதல்வர் விஜய்: அருமை நண்பர் அஜித் குமார் தாயார் மோகினி அம்மையார் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன். அவரது ஆன்மா இறைவன் திருவடியில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன். வாழ்வில் அனைத்து நிலைகளிலும் அரணாக இருந்து அரவணைத்த தாயாரை இழந்து வாடும் நண்பர் அஜித் குமாருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு.க. ஸ்டாலின்: அன்புச் சகோதரர் அஜித்குமாரின் தாயார் மோகினி மணி மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன். உயிர்கொடுத்து, தான் உயரங்கள் தொட்டதைப் பார்த்து மகிழ்ச்சி கொண்ட அன்னையினை இழந்து வாடும் அஜித்குமாரை தேற்ற என்னிடம் வார்த்தைகள் இல்லை. அன்னையுடனான அழகிய தருணங்களே இந்தத் துயரில் அவர் மீளத் துணைநிற்க விழைகிறேன். அஜித்குமார் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும் ஆறுதலும்.

இபிஎஸ்: திரையுலகில் முன்னணி நட்சத்திர நடிகரும் , கார் பந்தய வீரருமான சகோதரர் அஜித் குமாரின் தாயார் மோகினி மணி காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயருற்றேன். பாசமிகு தாயாரை இழந்து வாடும் சகோதரர் அஜித்குமார், அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு.வீரபாண்டியன்: நடிகர் அஜித் குமாரின் தாயார் இயற்கை எய்திய செய்தி மிகுந்த வருத்தத்தையும், துயரத்தையும் தருகிறது. அவரது மறைவுச் செய்தி திரைத்துறையினரையும், ரசிகர்களையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவரைப் பிரிந்து வாடும் நடிகர் அஜித் குமார், அவரது வாழ்க்கை இணையர் நடிகர் ஷாலினி மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புமணி: தமிழ்த் திரைப்பட நடிகர் அஜித் குமார் தாயார் மோகினி மணி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். தாய் மீது நடிகர் அஜித்குமார் கொண்டிருந்த அன்பை நான் அறிவேன். உலகில் எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத இழப்பு என்பது தாயாரின் மறைவு தான்.

அன்னையை இழந்து வாடும் நடிகர் அஜித்குமார் உள்ளிட்ட குடும்பத்தினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# ‘சென்னை முதல் தேனி வரை...’ குற்றச் சம்பவங்களை அடுக்கி தவெக அரசு மீது பிரேமலதா விமர்சனம்



சென்னை, மே.31-
“தமிழக முதல்வர் கவனம் செலுத்தி, சட்டம் ஒழுங்கை வலுப்படுத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிரந்தரமான தீர்வுகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா வலியுறுத்தியுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமை, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கொலைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் பொது மக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றன.சென்னையில் 16 வயது சிறுவனுக்கு மது கொடுத்து பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாக வடபழனி காவல் நிலைய தலைமைக் காவலர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவரே இத்தகைய குற்றச் செயலில் ஈடுபட்டதாக வெளியாகியுள்ள தகவல் மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல், சென்னை வேளச்சேரி பேருந்து நிலையம் அருகே 61 வயது மூதாட்டி ஒருவர் காயங்களுடன் மயக்க நிலையில் கிடந்துள்ளார். அந்த மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். வயது முதிர்ந்த பெண்கள்கூட பாதுகாப்பாக வாழ முடியாத நிலை உருவாகியுள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியது. விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே 11 வயது சிறுமி, 62 வயது முதியவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் மனிதநேயத்தை தலைகுனியச் செய்துள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த கேள்விகளை இந்தச் சம்பவம் மீண்டும் எழுப்பியுள்ளது. தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே நடைபெற்ற திருமண வீட்டில் முகமூடி அணிந்த கும்பல் ஒன்று புகுந்து அங்கிருந்தவர்களை சரமாரியாக வெட்டிய சம்பவம் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.மேலும், கடலூர் மாவட்டம் வடலூர் அருகே மண்ணில் அரைகுறையாக புதைக்கப்பட்ட நிலையில் 30 வயது இளம் பெண்ணின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பெண்களின் உயிர் மற்றும் பாதுகாப்பு குறித்த கவலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுவது தமிழக மக்களிடையே மிகுந்த வேதனையையும் பாதுகாப்பின்மையையும் உருவாக்கியுள்ளது.குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் பாதுகாப்பாக வாழும் சூழலை உறுதி செய்வது அரசின் முதன்மை பொறுப்பாகும். எனவே, தமிழக அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், பாலியல் வன்கொடுமை, கொலை மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக மேலும் கடுமையான மற்றும் விரைவான தண்டனை நடைமுறைகளை கொண்டு வர வேண்டும்.குற்றவாளிகள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்து அரசுக்கு வாய்ப்பு வழங்கியுள்ளனர். ஆனால், இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வது மக்களிடையே ஏமாற்றத்தையும் வேதனையையும் ஏற்படுத்துகிறது.தமிழக முதல்வர் நேரடியாக இந்த விவகாரங்களில் கவனம் செலுத்தி, சட்டம் ஒழுங்கை வலுப்படுத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிரந்தரமான தீர்வுகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இந்தச் சம்பவங்களைப் பார்க்கும்போது, 'வேலியே பயிரை மேய்ந்தது' என்ற பழமொழிக்கு ஏற்ப நிகழ்வுகள் நடந்துள்ளது மிகவும் வேதனைக்குரியதும், தலைகுனிவானது” என்று அவர் கூறியுள்ளார்.

# வானிலை முன்னறிவிப்பு: திருச்சி, தி.மலை உள்ளிட்ட 17 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



சென்னை, மே.31-
தமிழகத்தில் திருச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட 17 மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மத்திய கிழக்கு வங்கக்கடல் முதல் லட்சத்தீவு வரை மத்திய மேற்கு, தென்மேற்கு மற்றும் குமரிக் கடல் வழியாக சுமார் 5.8 கிமீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பாதை நிலவுகிறது. மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் சுமார் 1.5 கிமீ முதல் 7.6 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 3.1 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இவை காரணமாக தமிழகத்தில் நாளை ஒருசில இடங்களிலும், ஜூன் 1ம் தேதி ஓரிரு இடங்களிலும், 2 முதல் ஜூன் 5ம் தேதி வரை ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கரூர், திருச்சி, நாமக்கல், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.ஜூன் 1, 2 தேதிகளில் மேற்கூறிய மாவட்டங்களில் (விழுப்புரம் நீங்கலாக) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை மற்றும் ஜூன் 1ம் தேதியும் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 85 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கிருஷ்ணகிரியில் 8 செமீ, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு, ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை, கோவை மாவட்டம் தோலம்பாளையத்தில் தலா 7 செமீ மழை பதிவாகியுள்ளது.

# “விஸ்வகுருவால் ஒரு தேர்வை கூட ஒழுங்காக நடத்த முடியவில்லை” மோடியை சாடிய ராகுல்



புதுடெல்லி, மே.31-
“விஸ்வகுரு என்று சொல்லிக் கொள்பவரால் ஒரே ஒரு தேர்வைக் கூட ஒழுங்காக நடத்த முடியவில்லை. நாட்டின் கல்வி அமைப்பை அவர் முழுமையாக சிதைத்துவிட்டார்” என பிரதமர் நரேந்திர மோடிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி சாடியுள்ளார். நாடு முழுவதும் இன்று சியுஇடி யுஜி (CUET-UG) தேர்வு நடந்தது. இதில் பரவலாக பல மையங்களில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதை சுட்டிக்காட்டி ராகுல் காந்தி இவ்வாறு கூறியுள்ளார்.இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், “நீட், சிபிஎஸ்இ, எஸ்எஸ்சி, இன்று சியுஇடி. 4 தேர்வுகள். ஒரு கோடி மாணாக்கர். ஒன்றைக் கூட நேர்மையாக நடத்த முடியவில்லை. விஸ்வகுரு என்று சொல்லிக் கொள்பவரால் நாட்டில் ஒரே ஒரு தேர்வைக் கூட ஒழுங்காக நடத்த முடியவில்லை. மோடி, இந்த தேசத்தின் கல்வி அமைப்பை ஒட்டுமொத்தமாக சிதைத்துவிட்டார். நீங்கள் எந்த இளம் தலைமுறையினர் எதிர்காலத்தை சிதைத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அவர்களே இதற்கெல்லாம் உங்களை பொறுப்பேற்க வைப்பார்கள்” என்று பதிவிட்டுள்ளார்.தேசிய தேர்வு முகமை (என்டிஏ) நடத்தும் இளநிலை க்யூட் 2026 தேர்வுகள் நேற்று முதல் நடைபெறுவதாக இருந்தது. பக்ரீத் பண்டிகை கொண்டாடப்பட்டதால், நேற்று முதல் நடைபெறுவதாக இருந்த இளநிலை க்யூட் தேர்வை மே 31, ஜூன் 6 மற்றும் ஜூன் 7ம் தேதிகளுக்கு தேசிய தேர்வு முகமை மாற்றப்பட்ட இன்று தொடங்கியது.ஜூன் 6 மற்றும் 7ம் தேதி தேர்வு எழுதுபவர்களுக்கான நுழைவுச் சீட்டுகள் விரைவில் வெளியிடப்படும். அப்போது, அதை cuet.nta.nic.in என்ற இணையளத்தில் விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.இந்நிலையில், இன்று தேர்வு நடந்த மையங்களில் சிலவற்றில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாக செய்திகள் வெளியாகின. இதனை சுட்டிக் காட்டியே ராகுல் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.முன்னதாக நேற்று ராகுல் காந்தி, “சிபிஎஸ்இ ஓஎஸ்எம் முறை குளறுபடியில் கல்வி அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்காத பிரதமர் மோடி, தனது அரசைக் காப்பாற்றுவதில் தான் உறுதியாக இருக்கிறாரே தவிர நாட்டின் லட்சக்கணக்கான மாணவர்கள் பற்றி அவருக்குக் கவலை யில்லை” என்று கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது.



# தமிழகத்தில் நடக்கும் குதிரை பேரத்தை தடுத்து நிறுத்த கோரி ஆளுநரிடம் அதிமுக மனு

சென்னை, மே.31-
“அதிமுக எம்எல்ஏக்களை விலைபேசும் தவெகவின் நடவடிக்கையை ஆளுநர் தடுத்து நிறுத்த வேண்டும்” என அதிமுக எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.அதிமுக எம்எல்ஏக்கள் மரகதம் குமரவேல், ஜெயக்குமார் , சத்யபாமா, இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தவெகவில் இணைந்துவிட்டனர். இதையடுத்து அதிமுகவில் கடும் புகைச்சல் ஏற்பட்டுள்ளது. மேலும், தவெக குதிரை பேரத்தில் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர்கள் கடுமையாக குற்றம் சாட்டி வருகின்றனர்.இந்நிலையில், இது குறித்து அக்ரி கிருஷ்ணமூர்த்தி செய்தியாளர்களிடம் பேசும்போது, “குதிரை பேரத்தின் மூலமாக அதிமுக எம்எல்ஏக்களை விலைபேசும் தவெகவின் நடவடிக்கையை தடுத்த நிறுத்த வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், ஆளுநருக்கு கொடுத்த புகார் மனுவை நாங்கள் கொடுத்துள்ளோம்.இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளோம். தலைமை செயலகத்தையே தவெக கட்சி அலுவலகமாக மாற்றிவிட்டனர்” என்று கூறினார். இது தொடர்பாக வெளியிடப்பட்ட அதிமுக அறிக்கையில், “தமிழகத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற குதிரை பேரத்தை தடுத்து நிறுத்துவதற்கு, தமிழக ஆளுநர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, அதிமுக பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி கொடுத்த மனுவினை, இன்று அதிமுக விவசாயப் பிரிவுச் செயலாளரும், திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டமன்றக் குழு கொறடாவும், முன்னாள் அமைச்சருமான அக்ரி கிருஷ்ணமூர்த்தி, ம. தனபால், ஆகியோர், தமிழக ஆளுநரை நேரில் சந்தித்து வழங்கினார்கள்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயிர்க் கடன் முழு தள்ளுபடிக்கு பரிசீலனை: அமைச்சர் மரிய வில்சன் தகவல்

நாகை, மே.31-
“தவெக ஆட்சியில் இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தலின்படி விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு ரூ.2,500 வாக்குறுதி குறித்து திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தெரிய வரும்” தமிழக என நிதியமைச்சர் மரிய வில்சன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய பரிசீலனை செய்யப்படுகிறது. விவசாயக் கடன் தள்ளுபடியை பொறுத்தவரை, 2021ஆம் ஆண்டின் இறுதியில் அதிமுக ஆட்சியில் அறிவிக்கப்பட்டது. பின்னர் ஆட்சிக்கு வந்த திமுக, ஐந்தாண்டுகளில் அதை படிப்படியாக தவணை முறையில் நிறைவேற்றியது.தவெக ஆட்சியில் ஆர்பிஐ அறிவுறுத்தலின்படி விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது” என்றார்.

பின்னர், தவெக அளித்த பெண்களுக்கு ரூ.2,500 வாக்குறுதியை நிறைவேற்ற வாய்ப்பிருக்கிறதா என்ற செய்தியாளர் கேள்விக்கு பதிலளித்த அவர், “திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையில் (Revised budget) இது குறித்து தெரிய வரும்” என சிரித்தபடி தெரிவித்தார்.

## "கோட்டூர்புரத்தில் போராடியவர்களை கைது செய்தது தவெக அரசின் சர்வாதிகாரப் போக்கு" தினகரன்

சென்னை, மே.31-

'கோட்டூர்புரத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகளை ஒப்படைக்கக் கோரி போராடிய பயனாளிகளை காவல் துறையை ஏவி கைது செய்திருக்கும் தவெகஅரசின் அடக்குமுறை கடும் கண்டனத்துக்குரியது' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சென்னை கோட்டூர்புரத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு



வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடுகளை ஒப்படைக்கக் கோரி போராடிய பயனாளிகள் மீது காவல் துறையை ஏவி கைது செய்திருக்கும் தவெக அரசின் அடக்குமுறை கடும் கண்டன த்துக்குரியது. தங்களின் உரிமைகளுக்காக போராடும் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய துறை சார்ந்த அமைச்சரும், சட்டப்பேரவை உறுப்பினரும் வராமல் காவல் துறையை பயன்படுத்தி, அவர்களை ஒடுக்க நினைப்பது சர்வாதிகாரப் போக்கே தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?எனவே, பயனாளிகளுக்கான வீடுகள் விரைந்து ஒதுக்கீடு செய்யப்படுவதை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமும், தவெக அரசும் உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்

## பருத்தி மீதான இறக்குமதி வரியை முழுமையாக ரத்து செய்தது மத்திய அரசு

புது டெல்லி, மே.31-

பருத்தி இறக்குமதி மீதான சுங்க வரியை முழுமையாக ரத்து செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பு: இறக்குமதி செய்யப்படும் பருத்திக்கு விதிக்கப்படும் சுங்க வரி மற்றும் 'வேளாண் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கட்டணம்' (Agriculture Infrastructure and Development Cess) ஆகியவற்றில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படும். இந்த வரி ரத்து நடவடிக்கையானது, வரும் ஜூன் 1 முதல் அக்டோபர் 31 வரை அமலில் இருக்கும்.



இந்திய ஜவுளித் துறைக்கான பருத்தி இருப்பை அதிகரிக்கும் நோக்கத்தில் இந்த வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தற்காலிக வரி விலக்கு ஜவுளி மற்றும் ஆடைத் துறையில் பெருமளவில் மூலதன செலவுகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் லாபம் கிடைக்கும். மேலும், உள்நாட்டு விவசாயிகளின் நலன்களும் கருத்தில் கொள்ளப்படும். மொத்தத்தில், இந்த நடவடிக்கை உள்நாட்டு ஜவுளித் துறையில் ஈடுபட்டிருக்கும் சிறு, குறு நிறுவனங்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும், சந்தையில் பருத்தியின் கையிருப்பை உறுதி செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்றுதெரிவிக் கப்பட்டுள்ளது.முன்னதாக, பருத்தி மீது 11 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## குடும்பத்தினருடன் குடகு மலைக்கு ஸ்டாலின் பயணம்

சென்னை, மே.31-

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், ஓய்வு எடுப்பதற்காக குடும்பத்தினருடன் குடகு மலைக்குச் சென்றுள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெக, திமுக கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, ஐயுஎம்எல் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது.இந்தத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி திமுகவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேலும், சென்னை கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட மு.க.ஸ்டாலின் தோல்வி அடைந்தது, திமுகவினரை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் அதிமுகவிலும் மிகப்பெரிய குழப்பத்தை



ஏற்படுத்தியுள்ளது. அதிமுக 3வது இடத்துக்கு தள்ளப்பட்டதுடன், வெற்றி பெற்ற 4 எம்எல்ஏக்கள், தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தவெகவில் இணைந்தனர். அதிமுக மூத்த நிர்வாகிகளுக்குள்ளும் குழப்பநிலை இன்னும் நீடித்து வருகிறது.இத்தகைய பரபரப்பான அரசியல் சூழ்நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஓய்வு எடுப்பதற்காக, கர்நாடக மாநிலம் கூர்க் எனப்படும் குடகு மலைக்கு சென்றுள்ளார். அவருடன் மகன் உதயநிதி,மருமகன் சபரீசன் உள்பட குடும்பத்தினரும் சென்றுள்ளனர். நேற்று முன்தினம் இரவு சென்னையில் இருந்து தனிவிமானத்தில் மைசூரு சென்ற அவர்கள், அங்கிருந்து கார் மூலமாக குடகுமலைக்குச் சென்றுள்ளனர். ஜூன் 3ம் தேதி முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்தநாள் வருவதால், அதற்கு முன்பாக ஜூன் 2ம் தேதி சென்னை திரும்புவார் என்று கூறப்படுகிறது

## இந்தியாவிடம் பிரம்மோஸ் ஏவுகணை, ட்ரோன்கள் வாங்க சைப்ரஸ் விருப்பம்

புதுடெல்லி, மே.31-

இந்தியாவிடமிருந்து பிரம்மோஸ் ஏவுகணைகள், காமிகேஸ் ட்ரோன்கள் வாங்க சைப்ரஸ் விருப்பம் தெரிவித்துள்ளது.




சைப்ரஸ் அதிபர் நிகோஸ் கிறிஸ்டோடுலைட்ஸ் சமீபத்தில் இந்தியா வந்தார். அப்போது இந்தியாவிடம் இருந்து பிரம்மோஸ் ஏவுகணைகள், 'நாகாஸ்த்ரா1' மற்றும் 'ஸ்கைஸ்ட்ரைக்கர்' போன்ற காமிகேஸ் ட்ரோன்களையும் (தற்கொலைப்படை ட்ரோன்கள்) வாங்குவதில் சைப்ரஸ் விருப்பம் தெரிவித்தது. மேலும் தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த ராணுவ ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டால், துருக்கி அதிபர் ரசிப் தையீப் எர்டோகனுக்கு மிகப் பெரிய பின்னடைவாக இருக்கும். சைப்ரஸ் நாட்டின் வட பகுதியை நீண்டகாலமாக ஆக்கிரமித்து இருக்கும் துருக்கியின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமையும். இதனால் இந்தியாவிடம் பிரம்மோஸ் மற்றும் ட்ரோன்கள் வாங்க சைப்ரஸ் முடிவு செய்துள்ளது துருக்கியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் மீது இந்தியா ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொண்டபோது, பாகிஸ்தானுக்கு துருக்கி நூற்றுக்கணக்கான ட்ரோன்களை ரகசியமாக அனுப்பியது. அவற்றை இந்திய எல்லைகள் நோக்கி அனுப்பியது பாகிஸ்தான். ஆனால், இந்திய வான் பாதுகாப்பு கருவிகள் அவற்றை நடுவானிலேயே சுட்டு வீழ்த்தின. இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணை பாகிஸ்தானின் விமான தளங்களைத் தகர்த்ததை துருக்கி உட்பட உலக நாடுகள் நன்கு அறியும். இதனால் இந்திய ஆயுதங்களை வாங்க சைப்ரஸ் முடிவு செய்திருப்பது துருக்கிக்கு பீதியை ஏற்படுத்தியுள்ளது.

## கேரளாவில் சிக்கிய ஜெலட்டின் வெடிபொருள்: திருச்சி, விருதுநகரில் என்ஐஏ சோதனை

திருச்சி, மே.31-

கேரளாவில் கிடைத்த ஜெலட்டின் உள்ளிட்ட வெடிப்பொருட்களை தயாரித்த திருச்சி வெடிமருந்து தொழிற்சாலை உள்ளிட்ட இடங்களில் கொச்சினை சேர்ந்த என்ஐஏ அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.கேரளா மாநிலம் மலப்புரத்தில் கடந்த பிப்ரவரி மாதம் ஒரு லாரி நிறைய வெடி மருந்துகள் சிக்கின. அந்த லாரியில் இருந்த வெடி மருந்துகளை கைப்பற்றி கொச்சினை சேர்ந்த தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.அந்த விசாரணையில், அவை தமிழகத்தில் திருச்சி, விருதுநகர், கர்நாடக மாநிலத்தில் மிசாப்பூர் ஆகிய இடங்களில் உள்ள 3 வெடி மருந்து நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட வெடி மருந்துகள் என்பதை கண்டறியப்பட்டது.



திருச்சி மாவட்டம் துறையூர் அருகே முருங்கப்பட்டியில் செயல்பட்டு வரும் வெற்றிவேல் எக்ஸ்ப்ளோசிவ் எனப்படும் தொழிற்சாலையில் கல்குவாரிகள் மற்றும் கிணறுகள் தோண்ட பயன்படுத்தப்படும் ஜெலட்டின் குச்சிகள் உள்ளிட்ட வெடிப்பொருட்கள் தயாரிக்கப்படுகிறது. இந்த தொழிற்சாலைக்கு கொச்சினை சேர்ந்த 5 என்ஐஏ அதிகாரிகள் காலை 6 மணிக்கு வருகை தந்தனர். தொழிற்சாலைக்குள் சென்ற அதிகாரிகள் வெடி மருந்துகள் தயாரிப்பு, விநியோகம் குறித்த பதிவேடுகளை தொடர்ந்து ஆய்வு செய்தனர். இவர்களின் பாதுகாப்புக்காக தமிழ்நாடு சிறப்பு அதிரடி காவல் படையினர் ஒரு பேருந்தில் வந்திருந்தனர். தொழிற்சாலையை சுற்றி அவர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

சோதனை காரணமாக, பத்திரிக்கையாளர்கள் உட்பட வெளியாட்களை தொழிற்சாலை செயல்படும் பகுதிக்குள் போலீஸார் அனுமதிக்கவில்லை.

கடந்த 2016ம் ஆண்டு இந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் பணியில் இருந்த 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உடல் சிதறி பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.இதேபோல, தமிழகத்தில் விருதுநகரில் உள்ள ஒரு வெடிமருந்து தொழிற்சாலை, கர்நாடக மாநிலம் மிசாப்பூரில் உள்ள வெடிமருந்து தொழிற்சாலை என மொத்தம் 3 தொழிற்சாலைகளிலும், ஜெலட்டின் உள்ளிட்ட வெடிப்பொருட்கள் சட்டவிரோதமாக விநியோகம் செய்யப்பட்டது குறித்து கொச்சினை சேர்ந்த என்ஐஏ அதிகாரிகள் ஒரேநேரத்தில் தீவிர சோதனை மற்றும் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

விருதுநகரிலும் சோதனை:முன்னதாக, விசாரணையில் பறிமுதல் செய்யப்பட்ட டெட்டனேட்டர்கள் விருதுநகர் மாவட்டம் நரிக்குடி அருகே உள்ள அகத்தாகுளத்தில் சேலம் ஸ்ரீரெங்க பாளையத்தைச் சேர்ந்த சந்தோஷ்சிவன் என்பவருக்குச் சொந்தமான வெடிமருந்து ஆலையில் தயாரிக்கப்பட்டது தெரியவந்தது.மேலும், 2028ம் ஆண்டு வரை இந்த ஆலைக்கு உரிமம் உள்ளதும், ஆண்டுக்கு சுமார் 4.50 கோடி எண்ணிக்கையிலான டெட்டனேட்டர்களை தயாரிக்க முடியும் என்பதும், நைட்ரேட் உள்ளிட்ட வெடி பொருள்களை ஆண்டுக்கு சுமார 3 ஆயிரம் மெட்ரிக் டன் வரை உற்பத்தி செய்ய முடியும் திறன் கொண்டது என்பதும் தெரியவந்தது.அதோடு, அகத்தாகுளத்திலிருந்து தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களுக்கு டெட்டனேட்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டது தெரிய வந்தது. அதையடுத்து, அகத்தாகுளத்தில் உள்ள வெடிமருந்து ஆலை மற்றும் குடோனில் கேரளாவைச் சேர்ந்த தேசிய புலனய்வு முகமையின் 5 பேர் கொண்ட குழுவினர் இன்று காலை முதல் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டனர்.

## விமானப்படை விமானங்களில் நீட் வினாத்தாள் விநியோகம்

புதுடெல்லி, மே.31-

மருத்துவ இளநிலை படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வுக்கான வினாத்தாள் முன்கூட்டியே கசிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மகாராஷ்டிராவின் புனே நகரை சேர்ந்த சில பேராசிரியர்கள், நீட் வினாத்தாள் தயாரிப்பில் ஈடுபட்டு இருந்தனர். அவர்கள் மூலமாக நாடு முழுவதும் வினாத்தாள் கசிந்திருப்பது சிபிஐ விசாரணையில் தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக இதுவரை 13 பேர் கைது செய்யப்பட்டனர்.இந்த சூழலில் நீட் மறுதேர்வு ஜூன் 21ம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.இதுகுறித்து மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதாவது: இதற்கு



முன்பாக இந்திய அஞ்சல் துறை உதவியுடன் நீட் வினாத்தாள்கள் பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது நீட் மறுதேர்வுக்கான வினாத்தாள்களை பாதுகாப்பாக கொண்டு செல்ல விமானப் படையின் உதவியை கோரி உள்ளோம். இதற்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஒப்புதல் வழங்கி உள்ளார். பாதுகாப்புத் துறை, உள்துறை அமைச்சகம் மற்றும் அனைத்து மாநில அரசுகளின் உதவியுடன் நீட் மறுதேர்வு நேர்மையாக நடத்தப்படும். சிறு தவறுகூட ஏற்படாத வகையில் பல்வேறு பாதுகாப்பு நடைமுறைகள் கண்டிப்புடன் பின்பற்றப்படுகின்றன.இவ்வாறு அவர் கூறினார்.



## கள்ளச் சாராயம் குடித்து மகாராஷ்டிராவில் 18 பேர் உயிரிழப்பு

மும்பை, மே.31-

மகாராஷ்டிர மாநிலத்தில் கள்ளச்சாராயம் குடித்து 18 பேர் உயிரிழந்து உள்ளனர். இதுகுறித்து விசாரணை நடத்தி கடும் நடவடிக்கை எடுக்க முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் உத்தரவிட்டுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் புனே மாவட்டத்தின் பிம்ப்ரி சிஞ்ச்வாட் நகரின் புகேவாடி, தபோடி பகுதிகளில் 13 பேரும், புனே நகரின் ஹடப்சர், காலேபடல் பகுதிகளில் 5 பேரும் சாராயம் குடித்ததால் உயிரிழந்தனர். பிஎன்எஸ் மற்றும் மதுவிலக்கு சட்டப்பிரிவுகளின் கீழ்போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்த சம்பவத்தில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் யோகேஷ் வான்கடே என்ற நபர் அதிகாரியிடம் சரண் அடைந்தார். இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், ''மெத்தனால் என்ற நச்சு ரசாயனத்தை சாராயத்தில் கலந்ததாக யோகேஷ் வான்கடேஒப்புக் கொண்டுள்ளார். யோகேஷ் வான்கடே தவிர மேலும் 4 பேர் தற்போது போலீஸ் பிடியில் உள்ளனர். மேலும் இருவர் மாநில கலால்துறையின் பிடியில் உள்ளனர். இவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது'' என்று தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு புனே மற்றும் பிம்ப்ரிசிஞ்ச்வாட் காவல் ஆணையர்களுக்கு மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் உத்தரவிட்டுள்ளார். இதில் தொடர்புடைய யாரும் தப்பிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தவும் உத்தரவிட்டு உள்ளார்.

## விஜய் மறுநாள் திருச்சி பயணம்: வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவிக்கிறார்

சென்னை, மே.31-

முதல்வர் விஜய் நாளை மறுநாள் திருச்சி செல்கிறார். அவர் திருச்சி கிழக்கு தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவிக்கிறார். தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தவெக பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றது. பல்வேறு கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது. தவெக தலைவர் விஜய், முதல்வராக பொறுப்பேற்றார். இந்நிலையில் சட்டப்பேரவை தேர்தலில் திருச்சி கிழக்கு, பெரம்பூர் ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்ட விஜய், பெரம்பூரை தக்கவைத்து கொண்டு திருச்சி கிழக்கு தொகுதியில் தனது பதவியை ராஜினாமா செய்தார்.விரைவில் திருச்சி கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் திருச்சி கிழக்கு தொகுதி மக்களை சந்திப்பதற்காக முதல்வர் விஜய், வரும் 1ம் தேதி செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தேர்தலில் வெற்றி பெற வாக்களித்த திருச்சி கிழக்கு தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவிக்க உள்ளார். இதற்காக திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் எதிரே உள்ள கல்லூரி மையத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது

## இந்திய மாம்பழங்களை இறக்குமதி செய்ய ஜப்பான் திடீர் தடை தமிழக விவசாயிகளுக்கு பாதிப்பு

கிருஷ்ணகிரி, மே.31-

இந்திய மாம்பழங்களை இறக்குமதி செய்ய ஜப்பான் திடீர் தடை விதித்துள்ளதால், மா விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்துள்ளனர். தமிழகத்திலேயே, மா விவசாயத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதன்மை இடத்தில் உள்ளது. சுவை மிகுந்த ரகங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகளவில் விளைவிக்கப்படுகின்றன. இங்கிருந்து மாம்பழங்கள், மாங்கூழாகத் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதேபோல் அல்போன்சா, பங்கனப்பள்ளி உள்ளிட்ட சில மாம்பழ ரகங்கள் தமிழகத்தில் இருந்து



அதிகளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனிடையே, இந்திய மாம்பழங்களை இறக்குமதி செய்ய ஜப்பான் நாட்டு அரசு திடீரெனத் தடை விதித்துள்ளது. தற்போது மாம்பழ சீசன் காலம் என்பதால், ஏற்றுமதி பாதிக்கப்பட்டால் விவசாயிகளுக்குப் பெரிய அளவில் இழப்பு ஏற்படும் என வேதனை தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக, தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ராமகவுண்டர் கூறும்போது, மாவட்டத்தில் இருந்து ஆண்டுக்கு 1 லட்சம் டன் அளவிலான மாம்பழ வகைகள் ஜப்பான், ஆஸ்திரேலியா, சவுதி மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இதில், ஜப்பானுக்கு அனுப்பப்படும் பழங்கள் அனைத்தும் 'வேப்பர் ஹீட் ட்ரீட்மென்ட்' எனப்படும் ஆவி வெப்பச் சிகிச்சை மூலம் சுத்தப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன.இந்நிலையில், இந்தியாவில் இருந்து மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யும் ஆலைகள் சிலவற்றில் தங்களது சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை எனக் கூறி, மாம்பழங்கள் இறக்குமதிக்கு ஜப்பான் நாடு திடீரென தடை விதித்துள்ளது அதிர்ச்சி அளிக்கிறது.தற்போது மாம்பழ சீசன் காலம் என்பதால், தமிழக மா விவசாயிகளுக்குப் பெரிய அளவில் வருவாய் இழப்பு ஏற்படும்.ஏற்கெனவே, மாம்பழத்திற்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகி உள்ள நிலையில், ஜப்பான் நாட்டின் இறக்குமதித் தடை என்பது எங்களுக்கு மேலும் சுமையைத் தருகிறது.

ஜப்பானைத் தொடர்ந்து, ஒவ்வொரு நாடாக இறக்குமதித் தடை விதிக்கும் முன்பு, மத்திய அரசு உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும்.சுகாதாரக் குறைபாடுள்ள ஆலைகளுக்கு மத்திய அரசு சீல் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக தமிழக அரசும், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், என்றார்.

# 2017 பேட்ச் நேரடி ஐஏஎஸ் அதிகாரி! நெல்லை மாவட்ட கலெக்டராகப் பொறுப்பேற்பு



திருநெல்வேலி, மே.31-
திருநெல்வேலி மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சித் தலைவராக ஆனந்த் மோகன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்பொழுது சென்னை அலுவலகத்தில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இணை மேலாளராகப் பணியாற்றி வந்தார். கேரள மாநிலத்தைச் சேர்ந்தவரான ஆனந்த் மோகன், திருவனந்தபுரத்தில் உள்ள கேரள பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றவர் ஆவார். கடந்த 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐஏஎஸ் தேர்வில், தமிழ்நாடு கேடரில் நேரடியாகத் தேர்வாகி முத்திரை பதித்தவர். இப்புதிய பொறுப்பிற்கு முன்பு, இவர் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையராகவும் பணிபுரிந்து மிகச்சிறந்த நிர்வாகத் திறனை வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நெல்லை மாவட்டத்தின் புதிய கலெக்டராக நியமிக்கப்பட்டுள்ள இவருக்குப் பல்வேறு தரப்பிலிருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

## “விமானப் பயணம்... 5 ஸ்டார் ஹோட்டல் விருந்து!”

# சாதித்த அரசுப் பள்ளி பிள்ளைகளை விமானத்தில் பறக்கவிட்ட முன்னாள் மாணவர்கள் கொடுத்த அல்டிமேட் சர்ப்ரைஸ்!




சாத்தான்குளம், மே.31-
தூத்துக்குடி கொம்மடிக்கோட்டை சு.சந்தோச நாடார் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 10, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மற்றும் NMMS, TRUST, முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வுகளில் வென்று மாஸ் காட்டிய சாதனை மாணவர்களை, அப்பள்ளியின் முன்னாள் மாணவர்கள் சங்கம் அப்படியே ‘விமானத்தில்’ சென்னைக்கு இன்பச் சுற்றுலா அழைத்துச் சென்று கௌரவித்துள்ளது. விமான நிலையத்தில் சந்தன மாலை, பொன்னாடையுடன் ஏறிய மாணவர்கள், சென்னை வந்தடைந்ததும், இப்பள்ளிக்கு நிலம் வழங்கிய வள்ளல் கந்தசாமி பாண்டியன் மகன் சிவானந்த பாண்டியன் அவர்களால் இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து மாணவர்களுக்கு மெட்ரோ ரயில் ரைடு, பிர்லா கோளரங்கம், மெரினா பீச், புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் தலைமைச் செயலகம் ஆகியவை சுற்றிக் காண்பிக்கப்பட்டு, 5 ஸ்டார் ஹோட்டலில் தரமான மதிய விருந்தும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன. "அடுத்த ஆண்டும் சாதிக்கும் மாணவர்கள் இதேபோல் விமானத்தில் அழைத்துச் செல்லப்படுவார்கள்" என முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் முருகானந்தம் அதிரடியாகத் தெரிவித்துள்ளார்.*முக்கியப் பங்கேற்பாளர்கள்: * முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர் முருகானந்தம், செயலாளர் தில்லை மகேந்திரன், பொருளாளர் இனிகோ, முன்னாள் ஆசிரியர்கள் செல்வராஜ், ஆனந்த், ஐயப்பன், ஈஸ்வரி மற்றும் கமிட்டி உறுப்பினர் காசிபழம் ஆகியோர் உடனிருந்தனர். *சக்கர வியூகம் வாய்ஸ்:*அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பிரம்மாண்ட அங்கீகாரத்தை வழங்கிய கொம்மடிக்கோட்டை முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் இந்த அல்டிமேட் நற்பணி, ஒட்டுமொத்தத் தமிழகத்திற்கே ஒரு மாஸ் ரோல் மாடல்! தாங்கள் படித்து உயர்ந்த பள்ளிக்குத் திரும்பச் செய்யும் இத்தகைய நன்றிக்கடன்கள், அடுத்த தலைமுறை மாணவர்களை இன்னும் பெரிய உயரங்களை நோக்கிச் சிறகடிக்கத் தூண்டும். சாதித்த மாணவர்களுக்கும், அவர்களைச் சிறகடிக்க வைத்த முன்னாள் மாணவர்களுக்கும் சக்கரவியூகத்தின் மிடுக்கான ராயல் சல்யூட்.



# வெற்றிக்கு பின் சொந்த ஊருக்கு விசிட்! *திசையன்விளையில் சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரிக்கு மாஸ் வெல்கம்!

திசையன்விளை, மே.31-
தமிழக சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி, தேர்தலில் வெற்றி பெற்று அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு முதன்முறையாகத் தனது சொந்த கிராமமான திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள பனைவிளைக்கு வருகை தந்தார். திசையன்விளைக்கு வருகை தந்த சமூக நலத்துறை அமைச்சருக்குப் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து, அங்கிருந்த பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு அமைச்சர் ஜெகதீஸ்வரி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின் போது, திசையன்விளை நகர தமிழக வெற்றிக் கழக பிரமுகர் நீலகிருஷ்ணன் அமைச்சரைப் பொன்னாடை அணிவித்து, இன்முகத்தோடு வரவேற்றார். வரவேற்பு நிகழ்வின் போது எல்.ஐ.சி முருக பெருமாள் மற்றும் சமூக ஆர்வலர் பாலகிருஷ்ணன் உட்படப் பகுதி முக்கியப் பிரமுகர்கள் பலர் உடனிருந்தனர்.

# “25 லட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரம்!” மணல் குவாரிகளை உடனே திறக்க லாரி உரிமையாளர்கள் சங்கம் முழக்கம்!



சேலம், மே.31-
சேலம் மாவட்ட ஒருங்கிணைந்த மணல் லாரி உரிமையாளர்கள் நலச்சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் மற்றும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு, மாவட்டத் தலைவர் எஸ்.பி. செல்வராஜ் தலைமையில் குரங்குச்சாவடியில் உள்ள மாவட்ட தலைமை அலுவலகத்தில் சனிக்கிழமையன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தமிழக முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் மற்றும் அமைச்சர்களுக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, மணல் லாரி தொழில் சார்ந்த 25 லட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு உடனடியாக மணல் குவாரிகளைத் திறக்க வேண்டும்; எம் சாண்ட், பிசாண்ட் மற்றும் ஜல்லி ஏற்றி வரும் லாரிகள் மற்றும் டிரைவர்கள் மீது வழக்குப்பதிவு செய்வதைக் கைவிட வேண்டும்; நொரம்பு, செம்மண், கிராவல் மண் மற்றும் கருங்கல்லிற்கு உடனடியாக அரசு பர்மிட் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி அதிரடித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்டச் செயலாளர் கண்ணன், பொருளாளர் சந்திரன், துணைச் செயலாளர் செல்வம் ஆகியோரின் முன்னிலையில் மாவட்டத் துணைத் தலைவர் ஏ.கே. பழனிசாமி சிறப்புரையாற்றினார். தலைமை நிலையச் செயலாளர் மாரியப்பன் நன்றி கூறினார். இதில் டிப்பர், மேஸ்தா, ஜேசிபி உரிமையாளர்கள் மற்றும் சில்லரை வியாபார சங்க நிர்வாகிகள் பலர் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ திருப்பூர் மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மைப் பணிகளை மேம்படுத்தும் நோக்கில், உரம் செயலாக்க மையங்களில் நவீன உள்கட்டமைப்பு வசதிகள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலம்4, வார்டு எண்39க்கு உட்பட்ட சின்னாண்டிபாளையம் பகுதியில் அமைந்துள்ள ஆண்டிபாளையம் நுண் உரம் செயலாக்க மையத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். தூய்மைப் பணிகளை எவ்வித தொய்வுமின்றி விரைவாக மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது, இளநிலை பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.




# “குறைந்த காயம்... அசுர வேக ரிகவரி!” இதய சிகிச்சையில் மாஸ் காட்டும் நாராயணா ஹெல்த் சிட்டியின் ரோபோடிக் டெக்னாலஜி!

சேலம், மே.31-
ரோபோடிக் இதய அறுவை சிகிச்சையின் நன்மைகள் மற்றும் அதன் பயன்பாடு குறித்துப் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நாராயணா ஹெல்த் சிட்டி சார்பில் சேலத்தில் அதிரடியான செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.
நிகழ்ச்சியில் பேசிய மூத்த இதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் திருத்தணி குமரன், "ரோபோடிக் தொழில்நுட்பம் இதய சிகிச்சையில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது; இதன் மூலம் மிகக் குறைந்த காயம், குறைந்த ரத்த இழப்பு, குறைவான வலி மற்றும் நோயாளிகள் மிக விரைவாகக் குணமடைந்து வீடு திரும்புவது சாத்தியமாகியுள்ளது" என்றார். நாராயணா ஹெல்த் சிட்டி இதுவரை 1,200க்கும் மேற்பட்ட ரோபோடிக் இதய அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக முடித்துள்ளது. இதில் ஏப்ரல் 2025 முதல் தற்போது வரை தமிழ்நாட்டைச் சேர்ந்த நோயாளிகளுக்கு மட்டுமே 200க்கும் மேற்பட்ட சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. (சிகிஙிநி), ரியுமாட்டிக் மைட்ரல் வால்வு போன்ற சிக்கலான மற்றும் அரிய வகை இதய அறுவை சிகிச்சைகளையும் ரோபோடிக் தொழில்நுட்பம் மூலம் வெற்றிகரமாகச் செய்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இன்றைய மன அழுத்தமிக்க வாழ்க்கை முறைக்கு ஆரம்பகட்ட இதயப் பரிசோதனைகள் மிகவும் அவசியம் என்றும் எச்சரித்தார்.



■ டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை அமைச்சர் நமச்சிவாயம் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார் சுமார் அரை மணி நேரம் நீடித்த இந்த சந்திப்பில் புதுச்சேரி நிலவிவரும் அரசியல் சூழல் குறித்தும் மாநில வளர்ச்சி குறித்தும் பல்வேறு விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டது மேலும் புதுச்சேரி வளர்ச்சிக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் செய்வதற்கு தயாராக இருப்பதாக மத்திய அமைச்சர் அமித்ஷா அமைச்சர் நமச்சிவாயத்திடம் உறுதியளித்தார்.




## ஜூன் 3 கலைஞர் பிறந்தநாள் விழா!

# தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயற்குழுவில் அதிரடித் தீர்மானங்கள்!

தென்காசி, மே.31-
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஜூன் 3 பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சுரண்டை நகரம் கீழச்சுரண்டையில் உள்ள கலைஞர் நினைவாலயத்தில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வே. ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் ஜூன் மாதம் முழுவதும் ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் பொதுநலப் பணிகளைச் சிறப்பாக நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு ஒருமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், அண்மையில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் மாபெரும் வெற்றிக்காக அயராது உழைத்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்குப் பாராட்டுகளும் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன. நிகழ்வில், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலைக்கதிரவன் அவர்களுக்குக் கருப்பு சிவப்பு மாலை அணிவித்தும், கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், தலைவர்கள் மற்றும் கழக நிர்வாகிகளுக்கு வேட்டி அணிவித்தும் சிறப்பான முறையில் கௌ ரவிக்கப் பட்டது. இக்கூட்டத்தில் மாவட்டத் துணைச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் அணி அமைப்பாளர்கள் உட்பட ஏராளமான கழகத் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.




# 27 நாட்களில் கட்டுமான அனுமதி வழங்க சென்னை மாநகராட்சி ஆணையர் சமீரன் உத்தரவு!

சென்னை, மே.31-
கட்டுமான அனுமதி கோருபவர்களுக்கு 27 நாட்களில் அனுமதி வழங்க சென்னை மாநகராட்சி ஆணையர் சமீரன் உத்தரவிட்டுள்ளார். அனைத்து ஆவணங்களும் சரியாக இருந்தால் 18 நாட்களில் ஒப்புதல் அளிக்க உத்தரவிட்டுள்ளார்



■ திசையன்விளை அருகே உள்ள தனது சொந்த கிராமமான பனைவிளை ஊருக்கு வருகை தந்த சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரிக்கு, திசையன்விளை நகர வியாபாரிகள் சங்க பேரமைப்பு நகரத் தலைவரும், திருநெல்வேலி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான சாந்தகுமார் தலைமையில் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. அருகில் பா்னிச்சர் மணிகண்டன், எல்ஜசி முருகப்பெருமாள், சமூக ஆர்வலர் பாலகிருஷ்ணன் மற்றும் அமைச்சரின் சகோதரர் வசந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000